விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 056 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 01 திங்கட்கிழமை (13.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## தேர்தல் பிற்போடப்படும் என பெரமுனவுக்கு ரணில் வாக்குறுதி



### விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் பிற்போடப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார்.

ஆனால், தேர்தலை பிற்போடும் நோக்கம் ஜனாதிபதிக்கு கிடையாது. மாறாக, தேர்தலை பிற்போடுவதாக குறிப்பிட்டுக்கொண்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பலவீனப்படுத்துகிறார் என விமல் வீரவன்ஸ 11

## இலங்கை ஒற்றையாட்சி நாடு சமஷ்டிக்கு இடமில்லை

### பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா



(கொழும்பு)

இலங்கை ஒற்றையாட்சி நாடாகும், இங்கு சமஷ்டிக்கு இடமில்லை, இங்கு வாழ முடியாவிட்டால் பிரித்தானியாவில் போய் வாழுங்கள் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் 11

## படகு கவிழ்ந்ததில்
## ஆசிரியர், மாணவர்கள் உட்பட நால்வர் பலி

10 ஆம் பக்கம் பார்க்க

## ஒரு கிலோ நெல் ரூ.100க்கு கொள்வனவு
ஜனாதிபதி ரணில்

06 ஆம் பக்கம் பார்க்க

# மோடியைச் சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள்

## இந்திய அமைச்சர் குழுவிடம் தமிழ்க் கட்சிகள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**13ஐ முழுமையாக அமுல்படுத்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை உடனடியாக சந்திக்க ஏற்பாடு செய்யுங்கள் என ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இந்திய அமைச்சர் குழுவிடம் வேண்டுகோளை முன்வைத்துள்ளனர்.**

யாழிற்கு விஜயம் செய்துள்ள இந்திய இணை அமைச்சர் எல். முருகன் மற்றும் அண்ணாமலை ஆகியோருக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூகங்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் இடையில் இராப்போசன விருந்துபசாரமொன்று யாழில் உள்ள 12

## கணவன் இறந்த சோகத்தில் மனைவியும் உயிர்மாய்ப்பு



(கரணவாய்)

கணவன் உயிரிழந்த செய்தியை அறிந்த மனைவி தனக்குத் தானே தீ மூட்டி உயிரை மாய்த்த துயரச் சம்பவம் ஒன்று 11

## வடக்கில் 13வது திருத்தச் சட்டம் தற்போது நடைமுறையிலேயே உள்ளது

### ஆளுநர் ஜீவன் தியாகராஜா



(கொழும்பு)

மறுமலர்ச்சியை நோக்கி வடக்கு மாகாணத்தில் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அனைத்துச் செயற்பாடுகளும் 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அமைவாகவே முன்னெடுக்கப்படுவதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 11

## விபத்தில் காயமடைந்த இளைஞன் உயிரிழப்பு

(கரணவாய்)

விபத்தில் காயமடைந்த அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி கதிரிப்பாய் வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த விஜயரட்ணமூர்த்தி துவிசன் (வயது-20) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 6ஆம் திகதி சாவகச்சேரிப் பகுதியிலிருந்து தச்சுவேலை முடித்து புத்தூர் நீர்த்தாங்கி அருகிலுள்ள வீதியில் பயணம் செய்த போது வீதியில் சிலர் 11

## இரவு உறங்கச் சென்றவர் காலை சடலமாக மீட்பு

### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பாள்குளம் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வழமை போன்று மேசன் வேலையினை முடித்து விட்டு வீட்டில் படுத்துறங்கிய நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 11

## ரூ.100க்கு நெல் கொள்வனவு
## ரணிலின் வாக்குறுதியில் நம்பிக்கை இல்லை

### சிறீதரன் எம்.பி

(கொழும்பு)

நெல்லை 100 ரூபாய் வீதம் உத்தரவாத விலையில் கொள்வனவு செய்வதாக ஜனாதிபதி அளித்த வாக்குறுதியில் தனக்கு நம்பிக்கை இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள 12

## கிணற்றிலிருந்து முதியவரின் சடலம் மீட்பு


(கரணவாய்)

தோட்டக் கிணறு ஒன்றிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 11

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
02 – 02 – 1960

மறைவு
12 – 02 – 2023

## திரு.கனகசபை சந்திரபாலன்

**(சாவகச்சேரி, மீசாலை)**

யாழ்ப்பாணம் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சந்திரபாலன் அவர்கள் 12.02.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - ருக்மணி தம்பதியினரின் அன்பு மகனும் சுப்பிரமணியம் - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காயத்திரி, கார்த்திக், கஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுஜிந்தன், சுதனிகா ஆகியோரின் மாமனாரும், கேமலக்ஷிகா, பவிஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும், சிவபாலன், இராஜேஸ்வரி, நகுலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு உடன்பிறப்பும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13.02.2023 இன்று 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல் :- குடும்பத்தினர்*
**077 065 3004**

(14594)


## சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்

கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா விசாவும் மற்றும் சகல நாடுகளுக்குமான **Student Visa** வும் தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**Hybrid International Hub (pvt) LTD** (C-5944)

**076 250 0098 / 021 222 1265**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


இந்து பௌத்த பேரவை

## மீண்டும் நாட்டிய மயில்!!

## நாட்டிய மயில் 2023க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கடந்த 07 தடவைகள் 2004ஆம் ஆண்டிலிருந்து 02 வருடத்திற்கு ஒரு முறை இப் போட்டி நிகழ்ச்சி நடைபெற்றது. Covid 19 காரணத்தால் இடை நிறுத்தப்பட்டிருந்தது. மீண்டும் 2023 இல் போட்டி நிகழ்ச்சி ஆரம்பமாகவுள்ளது.

போட்டியில் பங்குபற்றுபவர்களுக்கான பொது நிபந்தனைகள்

1. போட்டியில் ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம்.
2. வயதெல்லை **18 - 28**
3. **2023** ஆம் ஆண்டு ஆவணி மாத **(August)** இறுதியில் இறுதி போட்டி நிகழ்ச்சி நடைபெறவுள்ளதால் இவ் வயதெல்லை கணிக்கப்படும்.
4. போட்டியில் கலந்து கொள்பவர்கள் தமது குரு அல்லது நடன ஆசிரியரின் பெயரை விண்ணபத்தில் குறிப்பிடல் வேண்டும்.
5. போட்டி நிகழ்வுகள் அனைத்தும் இலங்கையில் நடைபெறும். விஷேடமாக கனடா, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் இலங்கையைப் பூர்வீகமாக கொண்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.
6. போட்டி நிகழ்வுகள் விண்ணப்பதாரரின் எண்ணிக்கையைப் பொறுத்து அந்த நாடுகளில் கால் இறுதி போட்டி நடைபெறும்.
7. விண்ணப்ப முடிவு திகதி 31.03.2023

இப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புபவர்களுக்கு போட்டிக்கான விதி முறைகள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு,**
**தலைமைக்காரியாலயம்**
**இந்து பௌத்த கலாச்சார பேரவை**
**யாழ்ப்பாணம்.**

hbcaatc07@gmail.com
021 223 2072
077 271 1181
011 234 6303

(14590)

# கண்ணீர் அஞ்சலி



அமரர் திரு.
## செல்வ தயாளரூபன்

பிறப்பு 02.02.1958
இறப்பு 11.02.2023



அமரர் திருமதி.
## நாகராணி தயாளரூபன்

பிறப்பு 11.04.1962
இறப்பு 11.02.2023

**எமது சங்கத்தில் கடமையாற்றிய திரு. செல்வ தயாளரூபன் மற்றும் அவரது மனைவி தயாளரூபன் நாகராணி ஆகியோரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

அன்புக்கும் பண்பிற்கும் ஓர் தாயாய் தந்தையாய் ஆளாகி இப்புவியில் பெருமை சேர்த்து
இல்லறத்தில் இன்பமாய் வாழ்ந்து நல்லறத்தில் ஆண்டு பல கழிந்து
இன்புற்று வாழும் காலம் இறைவனுக்கும் இனிபோதும் என்றாகிவிட்டதன்றோ
விதியின் வினைப் பயனால் விண்ணுலகிற்கு சென்றுவிட்டீர்கள்
அன்பான பேச்சு பண்பான குணம் பாசமுடன் அரவணைக்கும்
உயர்ந்த உள்ளம் கொண்டவரே, உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளுக்கு ஆறுதல் கூறுவதுடன்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(14597)

**பிரதான வீதி, யாழ்ப்பாணம். யாழ் மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் ஆயத்தப் பணிக்காக 100 மில்லியனை வழங்கியது திறைசேரி

**(கொழும்பு)**

**உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு திறைசேரி 100 மில்லியன் ரூபாயினை வழங்கியுள்ளது.**

இந்நிலையில் திட்டமிட்டபடி மார்ச் 9 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க கூறியுள்ளார்.

இதேவேளை, தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் பெப்ரவரி 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

அந்த மூன்று நாட்களிலும் யாரேனும் தபால் மூலமாக வாக்களிக்க முடியாமல்போனால், 28 ஆம் திகதி மாவட்ட தேர்தல் அத்தியட்சகர் முன்னிலையில் செலுத்தலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டு விநியோகம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

வழக்குகள் நிலுவையில் உள்ள போதிலும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஆயத்தங்களை மேற்கொள்வதில் தங்களுக்கு சட்டத் தடைகள் எதுவும் இல்லை.

எனவே அறிவிக்கப்பட்ட திகதியில் தேர்தலை நடத்த ஆணைக்குழுவும் மற்ற தேர்தல் செயலக அதிகாரிகளும் பணியாற்றி வருவதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (நி)

# இந்தியா-இலங்கையின் நெருங்கிய அடையாளமே கலாசார நிலையம்

## தமிழிலும் சிங்களத்திலும் பதிவிட்ட இந்திய பிரதமர்



Narendra Modi
@narendramodi · Follow
India government official

இந்தியா இலங்கை இடையிலான நெருக்கமான கலாசார ஒத்துழைப்பினை அடையாளப்படுத்தும் ஒரு முக்கிய செயற்திட்டமே யாழ்ப்பாணம் கலாசார நிலையம். இந்நிலையத்தின் மூலமாக பெருவாரியான மக்கள் நன்மையடையவுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் அதிஉயர் பிரசன்னம் இந்நிகழ்வை மேலும் சிறப்பித்தது.

(டில்லி)

இந்தியா-இலங்கை இடையிலான நெருக்கமான கலாசார ஒத்துழைப்பினை அடையாளப்படுத்தும் ஒரு முக்கிய செயற்திட்டமே யாழ்ப்பாணம் கலாசார நிலையம். இந்நிலையத்தின் மூலமாக பெருவாரியான மக்கள் நன்மையடையவுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அதிஉயர் பிரசன்னம் இந்நிகழ்வை மேலும் சிறப்பித்தது என இந்திய பிரதமர் நரேந்திமோடி தனது டுவிட்டர் பதிவில் தமிழிலும் சிங்களத்திலும் குறிப்பிட்டிருந்தார். (நி)

# உள்ளூர் உருளைக்கிழங்கு அறுவடையில் கவனம் செலுத்த விவசாய அமைச்சு திட்டம்

(கொழும்பு)

விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கில், உள்ளூர் உருளைக்கிழங்கு அறுவடையில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஆகவே வெளிநாடுகளில் இருந்து உருளைக்கிழங்கு இறக்குமதியைத் தடுக்கும் வேலைத் திட்டத்தையும் விவசாய அமைச்சு ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

தடைக்கு பதிலாக இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குக்கு வரி விதிக்குமாறு நிதி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் இன்று நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் உள்ளூர் விவசாயிகள் தொடர்பில் கலந்துரையாட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# பெரமுன படுதோல்வி அடையும்

## பேராசிரியர் பீரிஸ்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட பொதுஜன பெரமுன தரப்பினர் படுதோல்வி அடைவார்கள் என பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஆட்சியாளர்களின் தேவைக்கு ஏற்ப நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைத் தீர்மானிக்க முடியாது என்றும் அரசியலமைப்பின் பிரகாரம் அனைத்தும் இடம்பெறும் என்றும் தெரிவித்தார்.

மக்களின் அடிப்படை உரிமைகளை உயர்நீதிமன்றம் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி)

# சர்வதேச நாணய நிதியத்தின் பொறிக்குள் இலங்கை சிக்கியுள்ளது - சரத் வீரசேகர

(கொழும்பு)

கடுமையான நிபந்தனைகளுடன் சர்வதேச நாணய நிதியத்தின் பொறிக்குள் இலங்கை சிக்குண்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குற்றம் சாட்டியுள்ளார்.

அவர்கள் முன்வைக்கும் கடுமையான நிபந்தனைகளை முழுமையாக செயற்படுத்தினால் சமூகக் கட்டமைப்பில் அமைதியின்மை நிலவும்.

ஆகவே வங்குரோத்து தீர்மானத்தை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு வங்குரோத்து நிலை ஏற்பட்டபோது சீனா, இந்தியா ஆகிய நாடுகள் வழங்க தீர்மானித்திருந்த நிதியுதவிகள் இடைநிறுத்தப்பட்டன.

அதுவரை முன்னெடுக்கப்பட்ட வெளிநாட்டு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன.



உண்மையில் இலங்கை வங்குரோத்து நிலை அடைந்ததா என்பதை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் சரத் வீரசேகர கேட்டுக் கொண்டுள்ளார். (நி)

# அவசர சத்திர சிகிச்சைகளுக்கு முன்னுரிமை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க மருத்துவமனைகளில் அத்தியாவசியமற்ற சத்திர சிகிச்சைகளை தாமதப்படுத்த சுகாதார அமைச்சினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் அவசர சத்திரசிகிச்சைகள் வழமை போன்று மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருந்துகள் மற்றும் உபகரணங்கள் தட்டுப்பாடு காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் அவசர சத்திரசிகிச்சைகளுக்கு முன்னுரிமை வழங்குமாறும் மருத்துவமனைகளுக்கு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (நி)

# 50 கோடி ரூபாய் மதிப்பிலான தலதாமாளிகையின் தங்கம் மகிந்தவிடமே-அதிகாரி பரபரப்புத் தகவல்

(கொழும்பு)

தலதாமாளிகைக்கு சொந்தமான 50 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கமும் ஒன்பது கோடி மதிப்பிலான நிலத்தினையும் விற்று முழுப்பணத்தினையும் மகிந்த ராஜபக்ஷவிடம் வழங்கியதாக தலதாமாளிகையின் முன்னாள் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் தலதாமாளிகைக்கு சொந்தமான 50 கோடி மதிப்புள்ள தங்கத்தினையும் ஒன்பது கோடி மதிப்பிலான நிலத்தினையும் விற்று முழுப் பணத்தினையும் நானே எனது கைகளினால் எண்ணி மூட்டைகளாக கட்டினேன்.

இந்த பணத்தினை தலதா மாளிகையின் தியவதன நிலமே தேல அலரிமாளிகைக்கு எடுத்துச்சென்றார். இதன்போது நானும் சென்றேன்.

ஆனால் வாகனத்திலேயே என்னை உட்கார வைத்துவிட்டு தியவதன நிலமே மாத்திரம் அலரி மாளிகைக்கு சென்று மகிந்தவிடம் பணத்தினை கொடுத்துவிட்டு வந்தார்.

தலதாமாளிகையின் நாளொன்றிற்கான வருமானம் 20 இலட்சம் ரூபாய். ஆனால் இந்த பணம் எங்கு செல்கின்றதென்பது தெரியாது. இது தொடர்பில் மகாநாயக்க தேரர்களுக்கும் நான் கூறியிருக்கின்றேன்.

நான் எனது பிள்ளைகளுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் நாட்டை சரியான முறையில் கையளிக்க வேண்டும் என்ற மனவேதனையில் இதனை நான் தெரிவிக்கின்றேன்.

மகிந்த, கோட்டாபயவின் இரகசியங்களை நான் தேர்தல் சமயத்தில் பொய்யான கருத்துக்களை வெளியிடவில்லை.

மகிந்தவும் கோட்டாபயவும் தலதாமாளிகையில் கொள்ளையடித்த முழு விபரமும் எனக்குத் தெரியும் எனத் தெரிவித்தார். (நி)

# அடுத்த ஆண்டு பாடத்திட்டங்கள் புதுப்பிக்கப்படும்-கல்வி அமைச்சர்

(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் 6 - 13 வரையான தரங்களுக்குரிய அனைத்து பாடத்திட்டங்களும் புதுப்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, செயற்கை நுண்ணறிவு பாடத்தை எட்டாம் தரத்தில் இருந்து ஆரம்பிப்பது தொடர்பிலான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்போது, மேலும் தெரிவித்த அவர், இளைஞர்களின் எதிர்காலம் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் அடங்கியுள்ளது.

செயற்கை நுண்ணறிவு பாடம் ஒரு விருப்பப் பாடமாக அல்லது பிரதான பாடத்திட்டத்தில் சேர்க்கப்படும். மாணவர்கள் அந்த பாடத்தை தகவல் தொழில்நுட்ப பாடங்களுடன் படிக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

இந்த அனைத்து கல்வி மாற்ற செயல்முறைகளுக்கும் அடிப்படையான கல்வியை டிஜிட்டல் மயமாக்கும் கொள்கைக்கு இரண்டு வாரங்களில் அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதல் பெறப்பட உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2022 இற்கான சிறந்த கால்பந்து வீரர் மூவரில் விருது யாருக்கு?



2022 ஆம் ஆண்டுக்கான பிபா உலக கால்பந்தாட்டத் தொடரின் சிறந்த வீரருக்கான விருது தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச கால்பந்து சங்க கூட்டமைப்பு (பிபா) சிறப்பாக செயற்படும் கால்பந்து வீரர்களுக்கு, ஆண்டுதோறும் சிறந்த வீரருக்கான விருது வழங்கி வருகின்றது.

கடந்த ஆண்டுக்கான பிபாவின் சிறந்த வீரர் விருதுக்கான இறுதிப் போட்டியாளர்களாக மெஸ்ஸி, கைலியன் எம்பாப்பே மற்றும் கரீம் பென்சிமா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கடந்த ஆண்டு இறுதியில் உலக மக்கள் எதிர்பார்த்த உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி கட்டாரில் சிறப்பாக நடைபெற்றது.

இந்தப் போட்டியில், இறுதி சுற்றில் நடப்பு சம்பியன் பிரான்ஸை பெனால்டி முறையில் 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஆர்ஜென்டீனா உலகக் கிண்ண கால்பந்து சம்பியன் பட்டத்தை பெற்று வரலாற்றுச் சாதனை படைத்தது.

பிபா உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில், அதிக கோல்கள் அடித்தவரான பிரான்ஸ் வீரர் கிலியன் எம்பாப்பே மொத்தம் 8 கோல்கள் அடித்து தங்க காலணியை பெற்றுக் கொண்டார்.

இதனையடுத்து, ஆர்ஜென்டீனா அணியின் தலைவர் மெஸ்ஸி 7 கோல்களுடன், ஒட்டுமொத்தத்தில் சிறப்பாக செயற்பட்டதற்கான சிறந்த வீரருக்குரிய தங்க பந்து விருதை பெற்றுக் கொண்டார்.

காயம் காரணமாக உலகக் கோப்பையை தவறவிட்ட பிரான்ஸ் வீரர் பென்சிமா, கிளப் போட்டிகளில் ரியல் மாட்ரிட் அணிக்கு சிறப்பாக விளையாடியதற்காக கடந்த ஆண்டு பலோன் டி ஓர் விருதை பெற்றுள்ளார்.

இதற்கமைய 2022 ஆம் ஆண்டுக்கான பிபா உலக கால்பந்தாட்ட தொடரின் சிறந்த வீரர் யார் என்பது பெப்ரவரி 27 ஆம் திகதி பாரிஸில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## ‘ஒரு படி முன்னேற்றம்’

# ரிஷப் பண்டின் வாசகத்தால் மகிழ்ச்சியில் ரசிகர்கள்



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட் கடந்த டிசெம்பர் 30 ஆம் திகதி அதிகாலை காரில் சென்றபோது விபத்தில் சிக்கினார். வீதியின் நடுவில் உள்ள தடுப்பில் மோதி தீப்பிடித்த காரில் இருந்து காயத்துடன் தப்பிய அவருக்கு முதலில் டேராடூனிலும் பிறகு மும்பையிலும் சிகிச்சை அளிக்கப்பட்டது.

கால் முட்டியில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டு தற்போது படிப்படியாக குணமடைந்து வருகிறார்.

சிகிச்சைக்கு பிறகு ரிஷப் பண்ட் தனது புகைப்படத்தை “ஒரு படி முன்னேற்றம்” என்ற வாசகத்துடன் சமூக வலைத் தளத்தில் வெளியிட்டார்.

கம்பூன்றி நடப்பது போல் உள்ள அந்த புகைப்படத்தை பார்த்து மகிழ்ச்சி அடைந்துள்ள ரசிகர்கள் விரைவில் களம் திரும்ப வேண்டும் என்று வாழ்த்தி பதிவிட்டு வருகிறார்கள். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2764

### மகிழன்




### சுதர்சினி




### அருண்




### றியானி




### தினேஸ்




### பிரதீபா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கி நிலநடுக்கத்தால் காணாமல் போயிருந்த இலங்கை பெண் சடலமாக மீட்பு



(அங்காரா)

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து துருக்கியில் காணாமல் போன இலங்கைப் பெண்ணின் சடலம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக துருக்கியிலுள்ள இலங்கை தூதரகம் தெரிவித் துளளது.

குறித்த பெண்ணின் சடலம் அவரது மகளால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

கண்டி - கலகெதரவில் இருந்து 20 வருடங்களுக்கு முன்னர் துருக்கிக்கு சென்ற, 69 வயதுடைய இலங்கைப் .பெண்ணே இவ்வாறு உயிரிழுந்தார்.

கடந்த 6 ஆம் திகதி துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தையடுத்து, அங்கு வசித்து வந்த 15 இலங் கையர்களும் பாதிப்புகள்இன்றி பாதுகாப்பாக மீட்கப் பட்டனர்.

எவ்வாறாயினும், துருக்கியில் வசித்து வந்த பெண்ணொருவர், நில நடுக்கத்தின் பின்னர் காணாமல் போயிருந்த நிலையில் அவரை தேடி தொடர்ந்து தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (நி)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி.நந்தகுமாரி பிரேம்குமார்
அவர்களின் அன்பு மாமியார்

**அமரர் இராசையா இராசலெட்சுமி**

அவர்கள் 07.02.2023 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம்: 04.08.1936
மறைவு: 07.02.2023

(14582)

யா/சன்மார்க்க மகா வித்தியாலயம், ஆசிரியர் நலன்புரிக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர்.திரு. **நாகலிங்கம் செல்வதயாழரூபன்**



அமரர்.திருமதி. **செல்வதயாழரூபன் நாகராணி**


எமது சக நண்பன் திரு.செல்வதயாழரூபன் சைலஜன் அவர்களின் அன்புத் தந்தை திரு.நாகலிங்கம் செல்வதயாழரூபன் மற்றும் அன்புத் தாயார் திருமதி.செல்வதயாழரூபன் நாகராணி அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இணையரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(14591)

ஆழ்ந்த துயரத்துடன் யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 25.03.1952
விண்ணில் 09.02.2023



எமது சக நண்பன் திரு.ஜஸ்ரின் ஞானசேகரன் பிரசன்னா அவர்களின் அன்புத் தாயார்

அமரர்.
**ஜஸ்ரின் ஞானசேகரன் மேரி சரோஜா**
(இளைப்பாறிய ஆசிரியை)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-5951)

ஆழ்ந்த துயரத்துடன் யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்.

## கண்ணீர்க் காணிக்கை



எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்

அமரர்.செல்வி.**இளையதம்பி தமிழ்ச்செல்வி**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மலர்வு : 05.09.1978
உதிர்வு :10.02.2023

(14589)

பிரிவால் துயருறும்:- பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும் உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், தெல்லிப்பழை.

## இராசிபலன்

13.02.2023
மாசி 01 , திங்கட்கிழமை
அட்டமி பின்னிரவு 04.32மணிவரை

விசாகம் முன்னிரவு 10.32மணிவரை
சுபநேரம் -12.34-02.04 மணிவரை
இராகுகாலம்- 08.04-09.34 மணிவரை

சந்திராஷ்டமம்
அச்சுவினி, பரணி

வளவன்

**மேஷம்**
விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், குதூகலம் தரும் பயணமொன்று ஏற்படக் கூடும், வருமானம் திருப்தி தரும்வகையில் அமையும்.

**ரிஷபம்**
நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**மிதுனம்**
மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்**
மனதில் நீண்டநாட்கள் இருந்த பாரம் குறையும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்**
குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, தொழிலை விரிவுபடுத்த நினைப்பீர்கள், அலைச்சல் சற்று அதிகரிக்கும் நாள்.

**துலாம்**
கற்பனை மிகுதியான நாள்,குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**விருச்சிகம்**
விரத வழபாடுகளில் நம்பிக்கை கூடும், வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரலாம் ,தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு**
பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தூர தேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு

**மகரம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் வாய்ப்புகள் தேடிவரலாம் , எதிர்பாராத நேரத்தில் பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும், கௌரவமான நாள்.

**கும்பம்**
நண்பர்கள் பக்கபலமாக இருப்பர், வீண் பழிகள் அகலும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, ரோக பயமுண்டு.

**மீனம்**
கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, பெரியவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது.

இளமையில் ஏற்படும் பழக்கம் இறக்கும் வரை தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிலோ நெல்

# 100 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும்

## கிளி.விவசாயிகளுக்கு உறுதியளித்த ஜனாதிபதி



(முறிகண்டி)

ஒரு கிலோ நெல் 100 ரூபாய்க்கு கொள்வனவு செய்வதற்கான பொறி முறையொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

ஒரு வாரத்திற்குள் இந்த திட்டம் அமுலாகும் இதற் காக 20 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சி விவசாயிகளுக்கு உறுதியளித்துள்ளார்.

கிளிநொச்சி பன்னாங் கண்டி பகுதியில் அறுவடை விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதியிடம், விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டது.

நெல்லுக்கான உரிய விலை நிர்ணயிக்கப்படாமை, விவசாயிகளுக்கான உள்ளீடுகள் மற்றும் கிருமிநாசினிகள் மானிய விலையில் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல் தொடர்பாகவும் எடுத்துரைக்கப்பட்டன. (நி)



முல்லைத்தீவு-கேப்பாபிலவு பகுதியைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு கடந்த புதன்கிழமை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்த விநாயகமூர்த்திக் குருக்கள் குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் குறித்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படம்- சுபேசன்)

# அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமுமே தமிழர்களுக்கு உதவ வேண்டும்

## 13 ஆவது திருத்தம் ஒரு எலும்புக்கூடு - காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கம்

(நெளுக்குளம்)

13 ஆவது திருத்தம் எலும்புக் கூடு என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் ஈகைப் பேரொளி முருகதாஸ்க்கான அஞ்சலி நிகழ்வின் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் இவ்வாறு தெரிவித்தார். நமது நாட்டில் உள்ள இந்திய தமிழ் முகவர்கள் 13 ஆவது திருத்தத்திற்கு அழைப்பு விடுக் கின்றனர்.

இது ஒரு எலும்புக்கூடு, எதுவும் இல்லை. 13 ஆவது திருத்தத்தை நீக்குமாறு பிக்குகளும் பல சிங்கள அரசியல்வாதிகளும் குரல் கொடுப்பதையும் இது காட்டுகிறது. 13 ஆவது திருத்தம் அல்லது சமஷ்டி கோரி நாம் நேரத்தை வீணடிக்கக் கூடாது.

இவை இரண்டும் ஒற்றையாட்சியின் ஒரு பகுதியும் மற்றும் 2/3 பெரும்பான்மை சிங்களவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் மட்டுமே தமிழர்களுக்கு உதவ முடியும்.

வடக்கு-கிழக்கில் உள்ள தமிழர்கள் அனைவரும் பொது வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுத்தால், அது அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பலம் வாய்ந்த நாடுகளை நிர்ப்பந்தித்து தமிழர் இறையாண்மைக்கான வாக்கெடுப்பை எளிதாக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-299)

# இளையோருக்கான தலைமைத்துவ கற்கை நெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வவுனியாப் பல்கலைக் கழக வியாபாரக்கற்கைகள் பீடத்தின். தொழில் சமூகத் தொடர்பு மையத்தின் ஊடாக வடக்கு-கிழக்கு இளையோர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறியானது ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிறுவனம் மற்றும் ஏனைய பங்காளர்களான சமூக அபிவிருத்தி நிறுவனங்களின் அனுசரணையுடன் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக ஐந்து நிலையங்களில் எட்டுப் பிரிவுகளாக இக்கற்கை நெறியானது நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (நி-33)



ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப் பின் ஊடாக கடந்த புதன்கிழமை முல்லைத்தீவில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. சமூக சேவகர் கோசலனின் நிதிப்பங்களிப்பில் குறித்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்- சுபேசன்)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா:37 சூரி 10 செவ் 12 இல்
உயரம்: 157 cm
தகைமை/ தொழில்: BA Computer Lecture (தனியார்)
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: B/13326

பிறப்பு:1977 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா:சூரி. செவ் 1 இல்
உயரம் :5'5"
தகைமை/தொழில்:A/L Bio (லண்டன்)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/13327

பிறப்பு:1989 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4
கி.பா:சூரி 3 செவ் 5 இல்
உயரம்: 5'5"
தகைமை/ தொழில்: மேசன், பெயின்ரிங்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/13329

பிறப்பு:1987இந்து
நட்சத்திரம்: பூசம் 2
கி.பா: 32சூரி 1 செவ் 2 இல்
உயரம்:5'4"
தகைமை/ தொழில்:O/Lசொந்த போட்டோ கொப்பிக் கடை
எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்
தொ.இ: B/13334

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சதயம் 3
கி.பா:31 சூரி 4 செவ் 8 இல்
உயரம்: 158 cm
தகைமை/ தொழில்:HNDA அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரச, தனியார் தொழில் சைவ போசனம் மட்டும்
தொ.இ:G/13340

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா:24 ¾ சூரி 3 செவ் 6 இல்
உயரம்:158 cm
தகைமை/தொழில்: BBMஅபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:பட்டதாரி
தொ.இ:G/13342

பிறப்பு:1995 இந்து
நட்சத்திரம்:புனர்பூசம் 3
கி.பா:சூரி 5 செவ்7 இல்
உயரம்:155 cm
தகைமை/ தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/13345

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம் 4
கி.பா:6 சூரி .செவ் 11 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc (Hons) Assistant Lecture
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/13359

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



## தூரிகை நுண்கலை வளாகம்

**• மகளிர்க்கான புதிய பயிற்சி நெறிகள்**
**பயிலுநர் அனுமதி -2023 (முதல் தொகுதி)**

மகளிர் ஒப்பனைகள், ஃபேஷியல், ஆரிவேர்க்,
கேக் அலங்கரிப்புகள், கூந்தல் தொடர்பான பயிற்சிகள்
உடையமைத்தலுக்கான தையல் பயிற்சி,
உடைகளை அலங்கரிக்கும் பெயின்ரிங் பயிற்சி, சிறுதொழில் பயிற்சிகள்



FEBRUARY 20
10 மணிக்கு ஆரம்பமாகின்றது

பயிற்சிகள் தொடர்பாக முழு விபரங்களையும் தொலைபேசி மற்றும் மீடியாக்கள் மூலம் அறிந்து கொள்ள முயற்சிப்பது பொருத்தமற்றது நேரடியாக வந்து விபரங்களைப் பெற்றுக் கொள்ளும் பட்சத்தில் பலதரப்பட்ட சலுகைகளும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது

பயிற்சிகளில் கலந்து கொள்வோர்க்கு குறித்த சில பயிற்சிகளும் மற்றும் பயிற்சிக் கருத்தரங்குகளும் இலவசம்

(சி-5954)

தூரிகை மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி
077 525 9954 / 077 914 3171


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய் உற்பத்தியை குறைக்கவுள்ளதாக
# ரஷ்யா அதிரடி அறிவிப்பு

## மேற்கத்தேய நாடுகளுக்கு பெரும் பாதிப்பு



(மொஸ்கோ)

ரஷ்யாவின் கச்சா எண்ணெய்க்கு மேற்கத்தேய நாடுகள் விலை வரம்பு நிர்ணயித்தமைக்கு ரஷ்யா பதிலடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அந்தவகையில், எண்ணெய் உற்பத்தியை அடுத்த மாதத்திலிருந்து குறைக்கவிருப்பதாக ரஷ்யா அதிரடியாக அறிவித்துள்ளது.

நேரடியாகவோ, மறைமுகமாகவோ விலை வரம்பை அமுல்படுத்தும் நாடுகளுக்கு இனி எண்ணெய் ஏற்றுமதி செய்வதில்லை என ரஷ்யா கூறியுள்ளது.

அந்தவகையில், ரஷ்யாவின் நாளாந்த கச்சா எண்ணெய் உற்பத்தியில் 5 இலட்சம் பேரல்கள் குறைக்கப்படும் என அந்நாடு கூறியுள்ளது.

ரஷ்யாவின் இந்த அதிரடி அறிவிப்பு, ரஷ்ய கச்சா எண்ணெயை எதிர்பார்க்கும் மேற்கத்தேய நாடுகளுக்கு பெரும் பாதிப்பாக அமையும் என சொல்லப்படுகின்றது.

## நிலநடுக்க பேரிடரால்
# 35 ஆண்டுகளின் பின்னர் திறக்கப்படும் எல்லைகள்

(அங்காரா)

பூகம்ப பேரிடரால் துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்திற்கு பலியானோர் எண்ணிக்கை 28,000 ஐ கடந்துள்ளது.

மீட்புப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வரும் நிலையில், பேரிடர் பகுதிகளுக்குச் சென்று துருக்கி ஜனாதிபதி ரீசெப் தயீப் எர்டோகன் பார்வையிட்டார்.

இந்த நிலையில் அண்டை நாடான அர்மேனியாவின் எல்லைக் கடவு, மனிதாபி மான உதவிகளை கடக்க திறக்கப்பட்டுள்ளதாக துருக்கிய தூதர் செர்டார் கிலிக் தெரிவித்துள்ளார்.

கடந்த 1988 ஆம் ஆண்டு அர்மேனியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சுமார் 30,000 பேர் பலியாகினர். அப்போது அர்மேனியாவுக்கு துருக்கி உதவ எல்லைக் கடவு திறக்கப்பட்டது.




அதன் பின்னர் 35 ஆண்டுகள் கழித்து முதல் முறையாக துருக்கிக்கு உதவ தற்போது எல்லைக் கடவு திறக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரச செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

துருக்கிக்கு உதவி செய்ய முடிந்ததில் மகிழ்ச்சி என்று அர்மேனியாவின் தேசிய சட்டமன்றத்தின் துணைத் தலைவர் ரூபன் ரூபினியன் டுவிட் செய்துள்ளார்.

இதற்கிடையில் அலிகன் கிராசிங்கில் இருந்து உணவு மற்றும் தண்ணீர் உள்ளிட்ட உதவிகளுடன் ஐந்து கனரக வாகனங்கள் மூலம் துருக்கிக்கு அனுப்பட்டுள்ளதாக செர்டார் கிலிக் கூறியுள்ளார்.

துருக்கி - அர்மேனியா ஆகிய இரு நாடுகளும் முறையான இராஜதந்திர உறவுகளை ஒரு போதும் ஏற்படுத்திக் கொள்ள வில்லை.

மேலும் 1990 களில் இருந்து அவற்றின் பகிரப்பட்ட எல்லை மூடப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு டிசெம்பரில் இரு நாடுகளும் உறவுகளை சீராக்க உதவுவதற்காக தூதர்கள் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## துருக்கி– சிரியா நிலநடுக்கம்
# பிறந்து பத்து நாட்களேயான பச்சிளம் குழந்தை உயிருடன் மீட்பு

(அங்காரா)

துருக்கி - சிரியா நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை 24 ஆயிரத்தை கடந்துள்ளது. மேலும், 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள துருக்கி, சிரியாவுக்கு உலக நாடுகள் உதவிக்கரம் நீட்டி வருகின்றன.

நிலநடுக்கத்தில் இடிபாடுகளுக்குள் சிக்கிய வர்களை மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இதில், பலர் உயிருடன் மீட்கப்பட்டு வருகின்றனர். இந் நிலையில், பிறந்து 10 நாட்களே ஆன பச்சிளம் குழந்தை கட்டட இடிபாடுகளில் இருந்து உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

இடிபாடுகளுக்குள் சிக்கிய அந்த பச்சிளம் குழந்தை 90 மணி நேரத்திற்கு பின் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

யாஹிஸ் உலஸ் என்ற அந்த பச்சிளம் குழந்தையின் தாயாரும் உயிருடன் மீட்கப் பட்டுள்ளார்.

நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதி யில் தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)




# இந்தியாவில் சில பகுதிகளில் நிலநடுக்கம்
## ஆய்வாளரின் கணிப்பால் அச்சத்தில் மக்கள்

(டில்லி)

லடாக்கின் கார்கில் பகுதியில் நேற்று நில அதிர்வு பதிவாகியுள்ளது. நிலநடுக்கம் தொடர்பான தேசிய மையத்தின் தகவலின்படி, நேற்று மாலை 03:17 மணிக்கு 4.2 ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நிலநடு க்கத்தின் மையம் பூமிக்கு அடியில் சுமார் 10 கிலோமீற்றர் தொலைவில் இருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கட்டடங்கள் உலுக்கியதால் அச்சம் அடைந்த மக்கள் வீட்டை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுள்ளனர். ஆனால் உயிர்ச்சேதமோ, பொருட் சேதமோ ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தியாவின் குஜராத் மாநிலத்திலும் நில அதிர்வு பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்க பதிவுகள் உலக மக்கள் மத்தியில் வியப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

துருக்கியை தொடர்ந்து சக்தி வாய்ந்த நிலநடுக்கம் எந்த நாட்டில் ஏற்படும் என்பது தொடர்பில் கடந்த நாட்களில் தகவல் வெளியாகி யிருந்தது.

துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நில நடுக்கங்கள் உலக அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த நிலநடுக்கத்தை 3 நாட்களுக்கு முன்பே கணித்த நெதர்லாந்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் இந்தியாவிலும் இதேபோன்ற சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாக அதிர்ச்சித் தகவலை வெளியிட்டிருந்தார்.

இந்தியா-பாகிஸ்தான் பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக பிரான்க் ஹூகர்பீட்ஸ் டுவிட்டர் பதிவு மூலம் முக்கிய எச்சரிக்கை விடுத்திருந்தார்.

துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்க நில அதிர்வுகள் இறுதியில் பாகிஸ் தானையும் இந்தியாவையும் கடந்து இந்தியப் பெருங் கடலில் முடிவடையும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

மேலும், ஆப்கானிஸ்தானில் தொடங்கும் ஒரு பெரிய நிலநடுக்கம் இந்தியா, பாகிஸ்தான் நாடுகளிலும் மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் இந்த நிலஅதிர்வு இறுதியில் பாகிஸ்தான், இந்தியாவைக் கடந்து இந்தியப் பெருங்கடலில் முடிவடையும் என்றும் அவர் சுட்டிக்காட்டி இருந்தார்.

இதற்கமைய இந்தியாவில் நேற்றைய தினம் நில அதிர்வுகள் பதிவாகியுள்ளதால் மக்கள் அவருடைய கணிப்புகளை எண்ணி வியப்படைந்துள்ளது டன் ஏற்படப்போகும் அழிவுகள் குறித்தும் அச்சமடைந்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 101





கோட்டை வாசலின் கதவுகள் இரண்டும் 'படார், படார்' என்று திறந்து கொண்டன. முதலில் இரண்டு குதிரை வீரர்கள் வந்தார்கள். அவர்கள் தங்களது வலக்கையில் உயரப் பறந்த கொடியை பிடித்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் கொடியின் தோற்றம் விசித்திரமாக இருந்தது.

செந்நிறமான அக்கொடியில் மேலே புலியும் புலிக்கு அடியில் கிரீடமும் சித்தரிக்கப்பட்டிருந்தன. கிரீடத்துக்கு அடியில் ஒரு பலிபீடமும் கழுத்து அறுபட்ட ஒரு தலையும் ஒரு பெரிய பலிக் கத்தியும் காட்சி அளித்தன.

கொடியைப் பார்க்கச் சிறிது பயங்கரமாகவே இருந்தது. கொடி தாங்கிய குதிரை வீரர்களுக்குப் பின்னால் ஒரு பெரிய ரிஷபம் இரண்டு பேரிகைகளைச் சுமந்து கொண்டு வந்தது. இரண்டு ஆட்கள் நின்று பேரிகைகளை முழங்கினார்கள்.

ரிஷபத்துக்குப் பின்னால் சுமார் ஐம்பது வீரர்கள் சிறுபறை, பெரும் பறை, தம்பட்டம் ஆகியவற்றை முழக்கிக் கொண்டு வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து இன்னும் ஐம்பது பேர் நீண்டு வளைந்த கொம்புகளை 'பாம், பாம், பபாம்' என்று ஊதிக் கொண்டு வந்தார்கள். அவர்களுக்கும் பின்னால் வந்த வீரர்கள் ஆயிரம் பேர் இருக்கலாம். அவர்களில் பெரும்பாலோர் பின் வரும் வாழ்த்தொலிகளை இடிமுழக்கக் குரலில் எழுப்பிக் கொண்டு வந்தார்கள்.

"பராந்தக சோழ பூமண்டல சக்கரவர்த்தி வாழ்க!" "வாழ்க, வாழ்க!" "சுந்தர சோழ மன்னர் வாழ்க!" "வாழ்க! வாழ்க!" கோழி வேந்தர் வாழ்க!" "வாழ்க! வாழ்க!" "தஞ்சையர் கோன் வாழ்க!" "வாழ்க! வாழ்க!" "வீரபாண்டியனைச் சுரம் இறக்கிய பெருமான் வாழ்க!" "வாழ்க! வாழ்க!" "மதுரையும் ஈழமும் தொண்டை மண்டலமும் கொண்ட கோ இராஜகேசரி வாழ்க!" "வாழ்க! வாழ்க!" "கரிகால் வளவன் திருக்குலம் நீடூழி வாழ்க!" "வாழ்க! வாழ்க!" "துர்க்கை மாகாளி பராத்பரி பராசக்தி வெல்க!" "வெல்க! வெல்க!" "வீரப் புலிக்கொடி பாரெல்லாம் பரந்து வெல்க!" "வெல்க! வெல்க!" "வெற்றி வேல்!" "வீரவேல்!"

நூற்றுக்கணக்கான வலியுள்ள குரல்களிலிருந்து எழுந்த மேற்படி கோஷங்கள் கேட்போரை மெய்சிலிர்க்கச் செய்தன. கோட்டை வாசலின் வழியாக வந்த போது அந்தக் கோஷங்கள் உண்டாக்கிய பிரதித்வனிகளும் சேர்ந்து கொண்டன.

வீதி ஓரங்களில் நின்ற மக்களில் பலரும் கோஷத்தில் கலந்து கொண்டார்கள். இவ்விதம், (தமிழ் நாட்டின் தெய்வமான முருகனுக்கு 'வேளக்காரன்' என்று ஒரு பெயர் உண்டு என்பதை வாசகர்கள் அறிந்திருக்கலாம் 'பக்தர்களைக் காப்பாற்றுவதாகச் சபதம் பூண்ட தெய்வம்' என்பதால் முருகனுக்கு அப்பெயர் வந்தது என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்).

வேளக்காரப் படை வீரர்கள் தஞ்சைக் கோட்டை வாசல் வழியாக வெளிவரத் தொடங்கி, வீதி வழியாகச் சென்று, தூரத்தில் மறையும் வரையில் ஒரே அல்லோலகல்லோலமாக இருந்தது.

இவர்கள் 'எங்கள் உயிரைக் கொடுத்தாவது அரசரின் உயிரைப் பாதுகாப்போம்' என்று சபதம் செய்தவர்கள்.

தங்கள் அஜாக்கிரதையினாலோ, தங்களை மீறியோ, அரசர் உயிருக்கு அபாயம் நேர்ந்து விட்டால், துர்க்கையின் சந்நிதியில் தங்களுடைய தலையைத் தங்கள் கையினாலேயே வெட்டிக் கொண்டு பலியாவதாகச் சபதம் எடுத்துக் கொண்டவர்கள். அத்தகைய கடூர சபதம் எடுத்துக் கொண்ட வீரர்களுக்கு, மற்றவர்களுக்கு இல்லாத சில சலுகைகள் இருப்பது இயல்பு தானே?

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்

### எதை எடுப்பது, எதை விடுப்பது?

(நேற்றைய தொடர்ச்சி)

'ஆகா! இது நம் குதிரை போட்ட லத்தியல்லவா? கீழே விழுந்து கிடக்கிறதே! கீழே விழுந்த எதையும் எடுத்து வைக்க வேண்டும் என்று குருநாதர் கண்டிப்பாச் சொல்லவில்லையா?"

மடையன் உடனே சற்றும் தாமதியாமல் அந்தக் குதிரை சாணத்தைக் குருநாதரின் தலைப்பாகையில் வைத்து எடுத்துக் கொண்டு வந்து மிகவும் பணிவாக, குருவின் முன் நீட்டினான்.

அதைக் கண்டதும் குருவுக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. "சீச்சீ! இதென்ன அசிங்கம்! குதிரை லத்தியை குருவின் ஆடையில் கொண்டு வருவதா? சே! சுத்த மோசம்!" என்று கோபித்துக் கொண்டார் குரு.

அதற்கு சிஷ்யர்கள் எல்லோரும் முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு சிணுங்கிக் கொண்டார்கள்.

'என்ன இது? கீழே விழுந்ததை எல்லாம் எடுக்க வேண்டுமென்று சொன்னதும் குருதான். எடுத்து வந்தால் கோபிப்பதும் குருதான். எப்படித் தான் நடந்து கொள்வது? குரு சொல்லைத் தலை மேற்கொண்டு நடந்தாலும் தவறாக இருக்கிறதே. இதற்கு என்னதான் செய்வது?" என்று அவர்கள் நொந்து கொண்டார்கள். அது குருநாதரின் செவிகளிலும் விழுந்தது.

"இது தெரியாதா? கீழே விழுவதில் எதை எடுக்க வேண்டும், எதை எடுக்கக் கூடாது என்று பகுத்தறிந்து நடந்து கொள்ள வேண்டும் அல்லவா?" என்றார் குரு.

"எங்களுக்கு ஏன் குருதேவா, இந்த வம்பெல்லாம். எதை எதை எடுக்க வேண்டும், எதை எதை எடுக்கக் கூடாது என்று எழுதிக் கொடுத்து விடுங்களேன்!" என்று கேட்டார்கள் சிஷ்யர்கள். குருவும் அவர்கள் கேட்டுக் கொண்டபடியே எழுதிக் கொடுத்து விட்டார்.

அதற்குப் பிறகு சிறிது தூரம் சென்றதும், சதுப்பு நிலப் பகுதியாக இருந்தது. தரை ஈரமாக வழுக்கிவிடக் கூடியதாக இருந்தது. குருவின் நொண்டிக் குதிரை ஓரிடத்தில் சறுக்கி விழுந்து விட்டது. அதன் மேல் ஏறியிருந்த குருநாதரும் குதிரை மீதிருந்து கீழே விழுந்தார். விழுந்தவர் அப்படியே உருண்டு அருகிலிருந்த ஒரு பள்ளத்தில் தலைகீழாகச் சாய்ந்து விட்டார்.

சிஷ்யர்கள் அவ்வாறே செய்தார்கள். குரு பள்ளத்தில் இருந்தபடியே அவஷ்தைப் பட்டுக் கொண்டு, "நான் கீழே விழுந்தாலும் எடுக்க வேண்டும்" என்று எழுதிக் கொடுத்தர். எழுதும் போதும் உபாதையால் அவர் கை நடுங்கியது. உள்ளம் அழுதது.

பள்ளத்திலே விழுந்து சேறும் சகதியுமாக இருந்த அவரை எழுதிக் கொடுத்த பிறகே சிஷ்யர்கள் மேலே தூக்கினார்கள். பின்பு அவர் உடலைச் சுத்தப்படுத்தி வேறு உடைகள் உடுத்திக் குதிரைமேல் ஏற்றிவிட்டார்கள். பிறகு மெதுவாக மடத்தை நோக்கிநடந்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நல்ல தலைவன் தான் தலைவன் என்பதை வார்த்தைகளால் அல்ல செயலால் உணர்த்துபவனாக இருக்க வேண்டும். ~ *விவேகானந்தர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அங்கு செய்ய முடியாததை பொலிஸார் இங்கு செய்கின்றனர்

யாழ்ப்பாணத்தில் நடந்த சுதந்திர தின நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டதுடன் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி சுகாஷ் ஆகியோர் உட்பட 18 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நாட்டின் 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் கடந்த பெப்ரவரி 04ஆம் திகதி கொழும்பில் நடந்தேறியது.

நாடு கந்தறுந்து காவடி எடுக்கும்போது, சுதந்திர தினக் கொண்டாட்டம் தேவையா என்ன? என்று கேள்வி எழுப்பக்கூடிய நேரத்தில், யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் 11 ஆம் திகதி சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நடந்துள்ளன.

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னதாக, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனப் பாராளுமன்றத்தில் வைத்துக்கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தான் கூறிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

தவிர, இனப் பிரச்சினைக்கான தீர்வு எப்போது ஏற்படும். இந்த நாட்டில் எப்போது நிம்மதியாக வாழ்வது என்ற ஏக்கத்தோடு இருக்கக்கூடிய தமிழ் மக்களுக்கு தீர்வு எதனையும் வழங்காமல், சுதந்திர தினக் கொண்டாட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவதென்பது எந்தவகையிலும் நியாயமாகாது.

எனினும் அப்படியொரு மோசமான வேலையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்யும்போது, அது கண்டு தமிழ் மக்கள் கொதிப்படைவார்கள் என்பதில் அடிப்படை நியாயமுண்டு.

இலங்கையின் சுதந்திர தினம் என்பது சிங்களத் தரப்புகளுக்கு உரியதாக இருக்கிறதேயன்றி, தமிழ் மக்களுக்கோ அன்றி முஸ்லிம் மக்களுக்கோ உரியதல்ல என்பது தான் கடந்த 75 ஆண்டு கால வரலாறு.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழின அழிப்பை மேற்கொண்டு தமிழ் மக்களை துன்பத்தின் உச்சத்துக்குக் கொண்டு சென்ற இந்த நாடு அதற்குரிய பரிகாரத்தை இன்னமும் தேடவில்லை.

இந்நிலையில், பெரும்பான்மை இனத்துக் குரித்தாக இருக்கக்கூடிய சுதந்திர தினத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவது அடிப்படை நியாயமற்றது.

இவ்வாறான கட்டத்தில் அதற்கான எதிர்ப்பைத் தமிழ் மக்கள் வெளிப்படுத்தவே செய்வர்.

அந்தவகையிலேயே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

எனினும் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது பொலிஸார் மிகமோசமாக நடந்து கொண்டுள்ளனர் என்பது, இன்னமும் இந்த நாட்டில் பேரினவாதத் தீ அணையவில்லை என்பதையே காட்டுகிறது.

உண்மை. தென்பகுதியில் ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்திய போது கைகட்டி நின்ற பொலிஸார் தமிழர் என்றதும் அடிதடிப் பிரயோகத்திலும் கைது செய்வதிலும் களமிறங்கியுள்ளனர்.

ஆக, பொலிஸார் அங்கு செய்ய முடியாததை இங்கு செய்துள்ளனர் என்பதுதான் முடிவு.

# பாரிய மருந்து தட்டுப்பாட்டால் மக்கள் அவதி நன்கொடையாளர்கள் உதவ முன்வாருங்கள்

## வட்டுக்கோட்டை வைத்தியசாலை பொறுப்பதிகாரி

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையிலுள்ள பிரதேச வைத்தியசாலையில் தற்போது பாரிய மருத்து தட்டுப்பாடு ஏற்புட்டுள்ள அதேவேளை நோயாளர் காவு வண்டி இன்மையால் மக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்தியர் ரதினி காந்தநேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடக சந்திப்பினை ஏற்பாடு செய்து தமது வைத்தியசாலையில் நிலவுகின்ற பிரச்சினைகளை வெளிக்கொண்டு வந்திருந்தார். பிரதேச வைத்தியசாலைக்கு என ஒதுக்கப்படுகின்ற நிதிகூட தற்போதுவரையில் ஒதுக்கப்படவில்லை என்றும் இதனால் நோயாளர் காவுவண்டி செயற்திறன் அற்றநிலையில் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மருந்துகளை கொள்வனவு செய்வதற்கும் நிதி இல்லை என்றும் எனவே நன்கொடையாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்த செல்வந்தர்கள் உதவுவதற்கு முன்வருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மிகவும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மக்கள் மிகவும் சிரமப்படுவதாகவும் அவர்களுக்கான பாணி மருந்துகளை வெளியில் கொள்வனவு செய்யுமாறும் கூறுவதற்கு கவலையாக உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே காவு வண்டியை திருத்துவதற்கான நிதி மற்றும் குழந்தைகளுக்கான அத்தியாவசிய மருந்துகளை பெற்றுக் கொள்வதற்கு கொடையாளர்களை முன்வருமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (4,7,104)

# போராட்டக்காரர்கள் மீது அரசு அடக்குமுறை; இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

வடக்கில் முன்னெடுக்கப்பட்ட ஜனநாயகப் போராட்டத்தை, அரஜாக முறையாக அடக்கி பாராளுமன்ற உறுப்பினரை வலுக்கட்டாயமாக தூக்கிய பொலிஸாரின் செயற்பாட்டினை தாம் வன்மையாக கண்டிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கள் மற்றும் வெசன அமைப்புக்களின் கூட்டமைப்பினர் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் ஆனால் அதற்கான எந்த தீர்வும் இந்த அரசாங்கத்திடம் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், மக்களால் முன்னெடுக்கப்படுகின்ற அமைதியான போராட்டங்களை பொலிஸாரை கொண்டு தடுப்பது மட்டுமே அரசாங்கத்தின் நடவடிக்கையாக உள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

எந்த பிரச்சினைகளையும் தீர்க்க முடியாத போது மக்களின் போராட்டங்களை அடக்குமுறை மூலம் கட்டுப்படுத்துவதே அரசாங்கத்தின் தீர்வாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (4,7)

# நாட்டில் குறைபாடுகளுடன் இயங்கும் வாகனங்கள்

இலங்கையில் 7 இலட்சத்திற்கும் அதிகமான மோட்டார் வாகனங்கள் குறைபாடுள்ள காற்றுப் பைகள் மற்றும் ஏனைய பாதுகாப்பு குறைபாடுகளுடன் இருப்பதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிசாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையின் வீதிகளில் பழுதடைந்த காற்றுப்பைகள் கொண்ட எஸ்யுவி உட்பட பல நவீன கார்கள், எவ்வித பரிசோதனையும் இன்றி பயணிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, வாகன இறக்குமதி முகவர்கள், பாதுகாப்பு குறைபாடுகளுடன் அடையாளம் காணப்பட்ட வாகனங்களின் உரிமையாளர்கள் தொடர்பான விபரங்களை திணைக்களத்திடம் இருந்து சேகரித்து, அந்த வாகனங்களை திரும்பப் பெற நடவடிக்கை எடுத்துவருவதாக ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பழுதடைந்த காற்றுப் பைகளை கொண்டுள்ள வாகனங்களை செலுத்துவது மிகவும் ஆபத்தானதாகும். இந்தநிலையில், மீள அழைக்கப்படும் வாகனங்கள் தொடர்பிலான தகவல்கள் தொகுக்கப்பட்டு ஊடகங்கள் ஊடாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்படவுள்ளன எனவும் தெரிவித்துள்ளார். (4-7)

# மூதூரில் கைகலப்பு ஒருவர் உயிரிழப்பு

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கங்குவேலி - புலியடிச்சோலை பகுதியில் இருவருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் கங்குவேலி - புலியடிச்சோலை பகுதியைச் சேர்ந்த கோகுலராசா (வயது-55) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அத்தோடு குறித்த நபரை தாக்கி கொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் 26 வயதுடைய சந்தேகநபரொருவரையும் மூதூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இருவருக்கிடையில் ஏற்பட்ட தனிப்பட்ட வாய்த்தர்க்கம் பின்பு கைகலப்பாகமாறியதில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நபரின் சடலம் கிளிவெட்டி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4,7)

# யாழில் இடம்பெற்ற மாபெரும் முத்திரைக் கண்காட்சி

(அராலி)

முத்திரை மற்றும் நாணயக்கண்காட்சி இளவாலை சென்ஜேம்ஸ் தேவாலயத்தின் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

அருட்பணிச்சபை மற்றும் புனித ஞானப்பிரகாசியார் மன்றம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த முத்திரை கண்காட்சி முன்னெடுக்கப்பட்டது.

80 நாடுகளின் முத்திரைகள்,65 நாடுகளுக்கும் மேற்பட்ட நாணயகுற்றிகள் மற்றும் நாணயத்தாள்கள் இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டன.

1996ஆம்ஆண்டில்இருந்து அவர் முத்திரைகள் மற்றும் நாணயங்களை சேகரிப்பதை தனது பொழுதுபோக்காகச்செய்து வருவதாக தெரிவித்தார்.

இந்த கண்காட்சிமூலம் மாணவர்களை தேவையற்ற இலத்திரனியல் உலகில் இருந்தும் அநாவசிய செயற்பாடுகளில் இருந்தும் சற்று விலக்கி பயனுள்ள பொழுதுபோக்கில் ஈடுபடுத்துவது நோக்கமாகவுள்ளது. (4,7,104)

# டெங்கு தொற்றாளர்கள் திடீர் அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தில் நாட்டில் 7,647 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தொற்று நோயியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தரவுகளின்படி, ஜனவரி மாதத்தில் 6,497 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், இந்த மாதத்தில் ஏற்கனவே 1,150 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

குறிப்பாக அதிகளவான நோயாளர்கள் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளதாக தொற்று நோயியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 140 இற்கும் மேற்பட்ட மருந்துகளின் கையிருப்பு தீர்ந்து விட்டது

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தகவல்

(கொழும்பு)

**நாட்டின் 140 இற்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்து வகைகளின் கையிருப்பு தீர்ந்து விட்டதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**


நோயாளர்களுக்கு சிகிச்சைக்காக வழங்கப்படும் மருந்து தொடர்பில், சுகாதார அமைச்சு கவனம் செலுத்த வேண்டுமென சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், தேசிய மருத்துவ மனை முதல் கிராமிய மருத்துவ மனைகள் வரை யிலான முழு மருத்துவ மனை அமைப்பின் சுகாதார சேவைகளைப் பராமரிப்பது பாரிய சவாலாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்திய கடன் உதவி முறையின் கீழ் இலங்கைக்கு கொண்டு வரப்படும் 80 சதவீத மருந் துகள்பதிவு செய்யப்படவில்லை.

இவ்வாறான மருந்து தட்டுப்பாட்டுக்கு ஆணைக்குழு பொறுப்பு கூற வேண்டும் என சுகாதார நிபு ணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். (நி)

# மலேசியாவுக்கு கடத்த முயன்ற 206 நட்சத்திர ஆமைகள் மீட்பு



(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில், மலேசியாவிற்கு கடத்த முற்பட்ட 206 நட்சத்திர ஆமைகளை இலங்கை சுங்கத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

விமான நிலையத்தின் விமான சரக்கு ஏற்றுமதி முனையத்தில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டதாக சுங்க பிரதிப் பணிப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான சுதத் டி சில்வா தெரிவித்தார்.

ஆமைகள் சாக்குகளில் சுற்றப்பட்டு, ஆறு பெட்டிகளில் அடைக்கப்பட்டு, "உலர்ந்த கடல் உணவுகள்" என்று குறிப்பிடப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்தார்.

இலங்கை நட்சத்திர ஆமைகள், இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் காணப்படும் ஜியோசெலோன் எலிகன்ஸ் இனத்தை சார்ந்தவையாகும். எனினும், அவை ஒரு குறிப்பிட்ட புவிசார் அடையாளத்தைக் கொண்டுள்ளன.

இது உலகில் காணப்படும் மிக அழகான ஆமை இனங்களில் ஒன்றாகும். இதன் காரணமாக இவை தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து சட்டவிரோதமாக வர்த்தகம் செய்யப்படும் உயிரினங்களின் பட்டியலில் உள்ளது.

இதன் விளைவாக இந்த ஆமை இனம் அழிந்துபோகும் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளது.

அத்துடன், இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தின் விலங்கினங்களின் சிவப்பு பட்டியலிலும் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை சுங்கத்தின், பல்லுயிர், கலாசார மற்றும் தேசிய மரபுரிமைப் பாதுகாப்புப் பிரிவினரால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (நி)

# படகு கவிழ்ந்து கோர விபத்து நால்வர் நீரில் மூழ்கிப் பலி

## மட்டக்களப்பில் சோகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் களுமுந்தன்வெளி கிராமத்தைச் சேர்ந்த ஆசிரியர் உட்பட மூன்று மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள தாந்தாமலை 40 வட்டை குளத்தின் துருசில் இருந்து குளத்தில் ஆசிரியர் ஒருவர் மற்றும் 3 மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் ஒரு மணிக்கு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுமுந்தன் வெளியைச் சேர்ந்த 27 வயதுடைய ஆசிரியர் மற்றும்16 வயதுடைய மாணவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

களுமுந்தன்வெளி அரச தமிழ் கலவன் பாடசாலையில் கா.பொ.த.சாதாரண தரத்தில் கல்விகற்றுவரும்3 ஆண்மாணவர்களும் 4 பெண் மாணவர்களும் ஆசிரியருமாக 8 பேர் சம்பவதினமான நேற்றுக் காலை ஒன்றிணைந்து தாந்தாமலை பகுதிக்கு சுற்றுலா சென்றுள்ளனர்.

குறித்த சமயம் 3 ஆண் மாணவர்கள் அருகில் இருந்த படகில் குளத்திற்குள் சென்றுள்ளார்கள். அப்போது படகில் இருந்த துளையினால் படகிற்குள் நீர் வரத்து ஏற்பட்டு படகு மூழ்க ஆரம்பித்திருக்கிறது.

நீரில் மூழ்கிய மாணவர்களை காப்பாற்றுவதற்கு ஆசிரியரும் குளத்திற்குள் சென்றுள்ளார். இந்நிலையில் மீட்பு முயற்சி தோல்வியடைந்த நிலையில் ஆசிரியரும் 3 மாணவர்களும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## தேர்தலை நடத்த

# ஒத்துழைப்பு வழங்காவிட்டால் சட்ட நடவடிக்கை - புஞ்சிஹேவா

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் மிகவும் அவசியம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். எனினும் அவ்வாறு ஒத்துழைப்பு வழங்காத அனைத்து தரப்பினர் மீதும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 160 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 160 | 180 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 300 | 300 |
| தக்காளி | 250 | 300 | 240 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 180 | 200 |
| கோவா | 50 | 60 | 80 | 100 |
| கரட் | 140 | 200 | 200 | 240 |
| பூசணி | 80 | 90 | 80 | 80 |
| புடோல் | 160 | 220 | 150 | 150 |
| வாழைக்காய் | 200 | 170 | 120 | 180 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 400 | 320 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 160 | 200 |
| பாகற்காய் | 250 | 250 | 280 | 500 |
| வெண்டக்காய் | 200 | 300 | 250 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 100 | 150 |
| பயற்றங்காய் | 450 | 400 | 500 | 600 |
| லீக்ஸ் | 300 | 300 | 250 | 300 |
| பீற்றூட் | 100 | 150 | 150 | 160 |
| கறிமிளகாய் | 750 | 600 | 450 | 500 |
| முருங்கைக்காய் | 1500 | 1600 | 1200 | 1600 |
| போஞ்சி | 300 | 300 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 100 | 160 |
| கீரை – 1 பிடி | 100 | 120 | 100 | 100 |
| தேசிக்காய் | 100 | 70 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-120 |
| இராசவள்ளி | 250 | 250 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 140 | 200 |
| முள்ளங்கி | 50 | 70 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 120 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | 140 | 100 | 120 |

## துருக்கி நில நடுக்க உயிரிழப்புகள்

# 50 ஆயிரத்தை அண்மிக்கும் என ஐ.நா அதிர்ச்சித் தகவல் வெளியீடு

(ஜெனிவா)

துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட நில அதிர்வுகள் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை 50 ஆயிரத்தை அண்மிக்கக் கூடும் என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண இயக்குநர் மாட்டின் கிரிபின்ஸ் தெற்கு துருக்கிக்கான விஜயத்தின் பின்னர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.அவர் நேற்று முன்தினம் நில அதிர்வு கேந்திர ஸ்தானமான கஹ்ரஸ்மன் மராஸ் பகுதிக்கு சென்றிருந்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

இன்னும் எத்தனை பேர் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர் என்பதை துல்லியமாக கூற முடியாது.

நிலநடுக்கத்தால் 26 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். துருக்கி மற்றும் சிரியா முழுவதும் குறைந்தது 870,000 பேருக்கு உணவுத் தேவைப்பாடு உள்ளது. (நி)

# நிலக்கரி கொள்வனவிற்கு 20 பில்லியன் ரூபா தேவை

## இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் தலைவர்

(கொழும்பு)

நிலக்கரி கொள்வனவிற்காக இம்மாதம் 20.2 பில்லியன் ரூபா தேவைப்படுவதாக இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை மின்சார சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் ஷெஹான் சுமனசேகர குறிப்பிட்டார்.

நிலக்கரி தொகையை ஏற்றிய 3 கப்பல்கள் தற்போது நாட்டை வந்தடைந்துள்ளன.

குறித்த 3, கப்பல்களில் ஒரு கப்பலிலிருந்து நிலக்கரியை இறக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஷெஹான் சுமனசேகர குறிப்பிட்டார்.

ஏனைய 02 கப்பல்களுக்கும் செலுத்த வேண்டிய கட்டணம் 6.4 பில்லியன் ரூபாவாகும்.

எனினும், அதற்கான பணம் இதுவரை கிடைக்கவில்லை. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில்...

கோழிக்கூட்டை தூக்கி வந்து கொண் டிருந்தனர். அதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் வேகக் கட்டுப்பாட்டை இழந்து கோழிக் கூட்டில் மோதுண்டு இன்னுமொரு மோட்டார் சைக்கிளுடனும் மோதுண்டு விபத்திற்குள்ளாகியுள்ளார்.

அதன்போது தலையில் படுகாய மடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (4-7,60)

## இரவு உறங்கச்...

முருகன் இரத்தினகுமார் என்ற 36 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந் தையே இவ்வாறு இறந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

மனைவி, பிள்ளைகளுடன் உறவி னர் வீட்டிற்கு சென்றிருந்த சமயம் தனிமையில் படுத்துறங்கிய நிலையில் இவ்வாறு சடலமாக காணப்பட்டுள்ள தாக ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வரும் நிலையில், பிரேத பரிசோதனையின் பின்னர் உற வினர்களிடம் சடலம் ஒப்படைக்க நட வடிக்கை எடுக்கப்படவுள்ளது.(4-7,316)

## கணவன்...

யாழ்ப் பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்.போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டிருந்த மூன்றாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வதயாளரூபன் என்பவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை மார டைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் செய்தியை தொலைபேசி மூலமாக அறிந்து கொண்ட அவரின் மனைவி நாகராணி (வயது-61) தனக்கு தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டியதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் எரிகாயம் அடைந்த அவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் இரவு சிகிச்சை பலனன்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசா ரணை அதிகாரி நமசிவாயம் பிறேம குமார் விசாரணைகளை மேற்கொண் டார். (4-7,60)

## வடக்கில் 13வது...

இந்திய அரசாங்கத்தினால் நிர்மாணிக் கப்பட்ட யாழ். கலாசார மத்திய நிலைய கையளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நன்கொடையை எமக்கு வழங்கியமைக்காக இந்திய அரசுக் கும் அதன் மக்களுக்கும் நன்றி உடைய வர்களாக இருக்கின்றோம்.

இதேவேளை வெளிநாட்டிலுள்ள இலங்கை மக்களுக்காக தடையற்ற நிலைபேறான அணுகுதலையும் தங்கி யிருத்தலையும் செயற்படுத்த அர சானது தற்போது விசா நடைமுறை யினை வடிவமைத்து வருகின்றது.

வடக்கில் பல வகையான வெளி நாட்டு கலாசார செல்வாக்குகள். ஆன் மீகத் தொடர்புகள் காணப்படுகின்றன. இத்தகைய காரணங்களுக்காக மக் கள் இந்தியாவுக்குச் செல்வதுடன் இந்தியாவிலிருந்தும் இலங்கைக்கு பயணிக்கின்றனர்.

தற்போது விமானங்கள் கிட்டத்தட்ட முழு எண்ணிக்கையான பயணிகளு டன் இயங்குகின்றன.

பயணப் படகுகள் ஆரம்பிப்பதற்கு தயாராகவுள்ளதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (4-7)

## இலங்கை...

சி.வி.விக்னேஸ்வரனுக்கு பீல்ட் மார் ஷல் சரத் பொன்சேகா பதிலடி வழங்கி யுள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கையில் அவர் இவ்வாறு கூறியுள் ளார்.

சமஷ்டி தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் தென்பகுதி அரசியல்வாதிகள் பலர் தங்களது எதிர்க் கருத்துக்களை வெளி யிட்டு வருகின்றனர்.

அந்தவகையில் சரத் பொன்சேகா இது தொடர்பில் தெரிவிக்கையில்,

விக்னேஸ்வரன் சிங்களப் பெண்ணை திருமணம் செய்துள்ளார். பிள்ளை களும் சிங்கள வழியில் வாழ்கின்றனர், தெற்கில் படித்துள்ளார், தெற்கில் தொழில் செய்தார், தற்போது தமிழர் களுக்காக குரல் கொடுப்பவர்போல் நடித்துக் கொண்டிருக்கிறார், அவர் ஒரு சிறந்த சந்தர்ப்பவாதி.

இவ்வாறு, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஊடகங்களுக்கு தெரிவித் துள்ளார். (4-7)

## தேர்தல்...

தெரிவித்துள்ளார்.

கடுவெல பகுதியில் நேற்று ஞாயிற் றுக்கிழமை இடம்பெற்ற சுதந்திர மக் கள் சபை கூட்டணியின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கி யுள்ள தீர்மானத்தை கௌரவத்துடன் வரவேற்கிறோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுமாறு தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனு எதிர்வரும் 23ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

ஆனால், தபால் மூல வாக்கெடுப்பு எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெற வுள்ளது. ஆகவே, உள்ளூராட்சி மன் றத் தேர்தலை பிற்போடுமாறு நீதி மன்றம் அறிவிக் காது என்ற நம் பிக்கை எமக்கு உள்ளது.

நாட்டு மக்க ளின் அடிப்படை உரிமையை பறிக்க அரசாங் கம் முயற்சித்த போது நீதிமன்றம் அதற்கு எதிராக தடை விதித்து மக்களின் அடிப் படை உரிமையை பாதுகாத்துள்ளது.

நிதி நெருக் கடிக்கு மத்தியில் தேர்தலுக்கு நிதி ஒதுக்கினால்பொரு ளாதாரப் பாதிப்பு தீவிரமடையும் என ஆளும் தரப் பினர் குறிப்பிடுகி றார்கள்.

ஆனால், தேர் தல் நடவடிக்கை களுக்கு தேவை யான நிதியை வழங்க எதிர் பார்த்துள்ளதாக திறைசேரி செய லாளர் நீதிமன்றத் துக்கு அறிவித் துள்ளார்.

ஆகவே, திட்டமிட்ட வகை யில் மார்ச் மாதம் 9ஆம் திகதி உள் ளூராட்சி மன்றத் தேர்தல் இடம் பெறும்.

இடம்பெற வுள்ள பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன படு தோல்வி அடை யும். பசில் ராஜ பக்ஷவின் படுதோல்வியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு சாதக மாக பயன்படுத்திக் கொள்ள முயற் சிக்கிறார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தி யில் தேர்தலுக்கு நிதி ஒதுக்கினால் பொருளாதார பாதிப்பு தீவிரமடையும் என ஆளும் தரப்பினர் குறிப்பிடு கிறார்கள்.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தி யில் 40 கோடி ரூபாய் செலவு செய்து 75 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாட முடியுமாயின், ஏன் உள்ளூராட்சி மன் றத் தேர்தலை நடத்த முடியாது எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (4-7)

## கிணற்றிலிருந்து...

அண்ணா சனசமூக நிலையம், கெருடா வில் தெற்கு தொண்டைமானாறைச் சேர்ந்த ஆரன் பாலசிங்கம் (வயது- 71) என்பவராவார்.

வீட்டிலிருந்து சுமார் 600 மீற்றர் தொலைவில் உள்ள தோட்டக் கிணற் றில் சடலம் காணப்படுவது தொடர்பில் வீட்டாருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் கிணற்றிலிருந்து சடலம் மீட் கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு சென்று விசா ரணைகளை மேற்கொண்ட பருத்தித் துறை மரண விசாரணை அதிகாரி சதா னந்தன் சிவராசா பிரேத பரிசோத னைக்கு உத்தரவிட்டுள்ளார். (4-7,60)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 12/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1484
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 8 4 9 6 5 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2023.02.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1059
H 26 27 61 65
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.02.12
சீட்டிழுப்பு இலக்கம் 3271
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
A 34 53 68 70
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 12/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1377
வெற்றி சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
U 02 46 65 68 71

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.12
சீட்டிழுப்பு இலக்கம் 338
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 10 33 34 49 ரிஷபம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/12
சீட்டிழுப்பு இலக்கம் 5029
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
D 5 6 5 1 4 5
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2004
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.12
தினம் ஞாயிற்றுக்கிழமை
O 21 50 53 70
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,052,200/-
DLB

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.12
சீட்டிழுப்பு இல : 4165
வர்ணம் : இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,538,320/-
வெற்றி இலக்கங்கள் 23 30 37 72
ஆங்கில எழுத்து I
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 287
சீட்டிழுப்பு திகதி 2023.02.12
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 15 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,149,500/-
DLB

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,819,232/-
திகதி 2023-02-12
வெற்றி வாரம் 3716
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 06 11 32 38
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,408,700/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 16 04 18 36 77
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1180
வர்ணம் மஞ்சள்
2023.02.12 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 305,315,756.20
DLB
Web : www.dlb.lk

அத கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1830
வர்ணம் : இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.12
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,817,440/-
வெற்றி இலக்கங்கள் 09 13 43 64
ஆங்கில எழுத்து D
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் வாக்குறுதியில்...

ஜனாதிபதி நேற்றைய தினம் கிளிநொச்சி - பரந்தன் வயல்வெளியில் விவசாயிகள்ள சந்தித்து நெற் செய்கை தொடர்பான பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டார்.

மேலும் ஒரு கிலோகிராம் நெல்லை 100 ரூபாய் வீதம் உத்தரவாத விலையில் கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே சிறீதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுதந்திரதினத்துக்கு சில மாதங்களுக்கு முன்பிருந்தே 75ஆவது சுதந்திரதினத்துக்கு முன்னர் தமிழர்களுக்கான தீர்வு, அதிஉச்ச அதிகாரம் காணி, பொலிஸ் அதிகாரம் என பல்வேறு வாக்குறுதிகளை அள்ளிவீசியிருந்தார் ஆனால் அவை இன்று காற்றோடு காற்றாகிப் போய் விட்டது. அப்படி இருக்கையில் இன்று அவர் விவசாயிகளிடம் அளித்திருக்கும் வாக்குறுதியின் நடைமுறை சாத்தியம் குறித்தும் தமக்கு ஐயமே எனத் தெரிவித்தார். (4-7)

# மோடியை சந்திக்க...

தனியார் விடுதியில் நடைபெற்றது.

இதன்போதே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.


13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுலாக்க வேண்டும் என்பது இந்தியாவின் நீண்டகாலக் கோரிக்கையாக உள்ளது.

ஆனால் தற்போது இலங்கையில் அதற்கு எதிரான போராட்டங்கள் வலுவடைந்து வருகின்றன.

இதேவேளை, இந்தியாவிற்கும் இலங்கைக்கும் 1987ஆம் ஆண்டு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டதையடுத்து அரசியலமைப்பில் உள்ளீர்க்கப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கும் தற்போது நடைமுறையில் காணப்படுகின்ற அதன் வடிவங்களுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுவதாக இந்திய இணை அமைச்சரிடம் சுரேஸ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார். (4-7)


நீங்கள் கடுமையான இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?
இன்றே பாவியுங்கள்.
சித்தாரா
துளசி
அசமோதகம் பாணி
ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு, அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.
யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMACY.
சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567
(குறிப்பு : சத்திரச்சந்திக்கு அண்மையில்)
(C-5953)


# இந்தியாவிலும் நில நடுக்கம்



(டில்லி)

இந்தியாவில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான அசாமில் லேசான நில நடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 4.0 ஆக பதிவாகியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாலை 4.18 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதோடு, இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பில் இதுவரையில் தகவல்கள் வெளியாகவில்லை என கூறப்படுகின்றது. (4-7)

# விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் மாளிகாவத்தை கொழும்பு- 10 ஐச் சேர்ந்த பழனி க்ணேசதாசன் (வயது-63) என்பவராவார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அன்று தெல்லிப்பழையில் இருந்து காங்கேசன்துறை நோக்கி சென்று கொண்டிருந்த போது அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் மாவிட்டபுரம் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.


இதில் பின் இருக்கையில் இருந்து சென்றவர் தூக்கி வீசப்பட்டு படுகாயமுற்ற நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் உயிரிழந்தார்.

இவ் மரணம் தொடர்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (4-7,60)

# இறுதிக்கிரியை திகதி மாற்றம்

தோற்றம்
16 – 05 – 1939



மறைவு
10 – 02 – 2023

## சின்னத்தம்பி சத்தியமூர்த்தி
(ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி)

கடந்த 10.02.2023 அன்று காலமான வடமராட்சி நெல்லியடி, கரவெட்டி இலங்கை வங்கி ஒழுங்கை (லக்ஸ்மி தியேட்டர் ஒழுங்கை) ஐ பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சின்னத்தம்பி சத்தியமூர்த்தி அவர்களின் இறுதிக் கிரியைகள் 14.02.2023 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு இலங்கை இராணுவத்தின் இராணுவ மரியாதையுடன் நடைபெறும்.

இத் திகதி மாற்றத்தை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். இது பற்றிய மரண அறிவித்தல் (12.02.2023) நேற்று ஞாயிற்றுக்கிழமை வலம்புரி பத்திரிகையில் வெளிவந்திருந்தது.

சிறீஸ்கந்தராசா : 077 822 5333
அரவிந்தன் : 077 411 1258
வீட்டு தொ.பே இல. : 021 226 3610

தகவல் : குடும்பத்தினர்
இலங்கை வங்கி ஒழுங்கை,
நெல்லியடி.
(C-5952)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14568)
076 825 7716 (ஆகாஸ்)

வாடகைக்கு விடப்படும்
கார்கள் வான்கள்
வாடகைக்கு விடப்படும்.
நாள், வாராந்த
வாடகை
077 489 1279
(14593)

விற்பனை
பசுக்கன்றுகள்
விற்பனைக்கு உண்டு.
தொலைபேசி இல :-
077 978 9375
077 517 3798
(14595)

காணி விற்பனைக்கு
சாவகச்சேரி, நுணாவில் (A9) கண்டி பிரதான வீதி முகப்பாக நிலப்பரப்பு 4 வணிக வளாகங்கள், ஹொட்டல்கள், அமைப்பதற்கும் சகல வியாபார தேவைகளுக்கும் ஏற்ற இடம்.
நல்ல தண்ணீர், நல்ல சூழல்.
• விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
• தரகர் தேவையில்லை.
(14577)
தொடர்புகளுக்கு :- 076 690 6272

குத்தகைக்கு தேவை
வான்கள், கார்கள் குத்தகைக்கு தேவை. தகுந்த கூலி வழங்கப்படும்.
077 489 1279
(14592)

சுய தொழில்வாய்ப்பு - நிறைந்த வருமானம்
V2 TRAVELS CHOLA FOODS CHOLA INTERNATIONAL (PVT) LTD உடன் இணைந்து
புதிதாக ஆரம்பிக்கும் உணவுப்பொதிகள் விநியோகத்தில் உங்கள் பிரதேசத்திற்கான உணவுப்பொதிகள் விநியோகதாரராக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்
பகுதிநேரமாக மாதம் 50'000/= மேல் சம்பாதிக்கலாம்
(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
ஆட்டோ/ மோட்டார் சைக்கிள்/சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்
யாழ் மாவட்டத்தில் எப்பகுதியில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்
(C-5955)
V2 TRAVELS 0777-068-777

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
(C-5955)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org